உலகத்தில் 10 மில்லியன் மக்கள் தூக்க மின்மையால் பரிதவிக்கின்றனர். தூக்கமின்மை என்பது தனிப்பட்ட பிரச்சனை இல்லை. உடலில் பல பிரச்சனைகளுக்கு காரணமாக இருக்கிறது. தூக்கமின்மைக்கு முக்கிய காரணம் மன அழுத்தம் மற்றும் நீண்ட நாள் குடி பழக்கம், குடும்ப பிரச்சினை, அதிக வேலைபளு, சுவாச பிரச்சனை போன்றவைகளும் தூக்கமின்மைக்கு காரணமாக அமைகிறது.

மேலும் ஆழ்ந்த உறக்கம் தான் தூக்கமின்மையை சரிப்படுத்த முடியும். அதே போல அதிக தூக்கமும் ஆபத்தானது தான்.

**''தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.''**

குறளின் நெறி காலம் தாழ்த்தி செய்ய வேண்டிய வேலைகளை காலம் தாழ்த்தியே செய்ய வேண்டும். காலம் தாழ்த்தாமல் விரைந்து உடனே செய்ய வேண்டிய வேலைகளை காலம் கடத்தாமல் செய்ய வேண்டும்.

மனித உடலுக்கு நான்கு வகையில் ஆற்றல் கிடைக்கிறது எவ்வாறு என்று தெரிந்து கொள்வோமா?

வயிறானது எப்பொழுதுமே நிறைந்திருக்க வேண்டும் என்பது தவறான எண்ணம். இந்தப் பழக்கத்தினால் என்ன ஆகும் என்றால் உணவு கொஞ்சம் குறைந்துவிட்டாலும் ஏதோ இழந்து விட்டது மாதிரி இருக்கும். அதைப்போட்டு நிரப்பி விட்டுத் தவிக்கிற வரைக்கும் மனதுக்கு திருப்தி இருக்காது.

நமக்கு வரக்கூடிய உயிர்ச்சக்தி தினம் தோறும் செலவாகிக் கொண்டே இருக்கிறது. வந்து கொண்டேயும் இருக்கிறது. அது உணவிலே இருந்து ஒரு பகுதி, காற்றில் இருந்து இன்னொரு பகுதி, கோள்களில் இருந்து வரக் கூடிய அலைகளாக (Astronomical radiations) சேர்ந்து வர அவை துகள்களாகி அது ஒரு பகுதி, பூமியின் நடு மையத்திலிருந்து (Atomic fission) அணுக்கள் உடைகிற போது அதிலிருந்து தெறிக்கக்கூடிய அந்த துகள்கள் எல்லாம் பூமியினுடைய மேல்பக்கம் தான் நோக்கி வரும். அதிலேயிருந்து ஒரு பகுதி - ஆக நான்கு வகையிலே நம் உடலில் உள்ள சிற்றறைகள் (Cells) நமக்குத் தேவையான உயிர் சக்தியை அவ்வப்போது தேவையான அளவுக்கு ஏற்றிக் கொள்ளும். இந்த நான்கில் ஒவ்வொன்றுக்கும் ஒருவிதமான கனம் (density) உண்டு. அறிவுக்கும் உடலுக்கும் உகந்த விகிதத்திலே இவை ஈர்க்கப்பட வேண்டும். உணவை மாத்திரம் எப்போதும் நிரப்பி வைத்துவிட்டால் மற்ற வகையில் இருந்து வருவதைத் தடுத்து விடுகிறோம். அப்படித் தடுத்து விடுவதனால் சில குறைபாடுகள் விளைகின்றன. சிலருக்கு கால்சியம் சத்து குறைவாகவுள்ளது. இரும்புச் சத்து குறைவாகவுள்ளது (Calcium deficiency, iron deficiency) என்றெல்லாம் கேள்விப்பட்டு இருப்பீர்கள். பலவிதமான உலோகச் சத்துக்கள், இரசாயனங்கள் எல்லாம் உடலுக்குத் தேவை. அவை குறைந்து விட்டால் நோய் வரும்.

அதனால் எந்த உணவு சாப்பிட்டாலும் அது சுத்தமாயும் நல்ல சத்துடையதாகவும் இருக்க வேண்டும். போஷாக்கு என்பது உணவின் அளவைப் பொருத்தல்ல. நாம் உண்ணக்கூடிய உணவு ஜீரணம் செய்து பழகிய உணவாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அடுத்த முறை உணவு எடுக்கும் போது ஒரு மணி நேரம் முன்னதாகவே பசி இருக்க வேண்டும். அதுதான் உணவில் அளவு முறை.

ஒரு மணி நேரம் தினந்தோறும் இரண்டு வேளையும் பசி இருந்தால் அந்த நேரத்தில் உணவில் இருந்து தேவையான ஆற்றலை இழுக்க முடியவில்லை என்றால் உடல் தானாகவே காற்றில் இருந்து, கோள்களின் அலை வீச்சிலிருந்து சக்தியை எடுத்துக் கொள்ள முடியும். அப்பொழுதுதான் அறிவுக்கு விருந்தாக, சிந்தனைக்கு ஏற்ற விருந்தாக நல்ல சக்தி நமக்குக் கிடைக்கும். வயிற்றை மட்டும் நாம் நிரப்பிக் கொண்டிருந்தால் உலக விவகாரங்களில் உழைக்கிறது என்ற வரைக்கும் தான் வரும். அதற்கு மேலே சிந்தனை ஆற்றல் பெருகுவது என்பது சிரமம். சிந்தனை ஆற்றலே மனிதனின் சிறப்பு

உணவில் எளிமை, உழைப்பில் கடுமை.
ஒழுக்கத்தில் உயர்வு, உத்தமர் இயல்பு.

●

# பல் மருத்துவம்

**- நன்றி முதுமை மாத இதழ்**

### பல் பராமரிப்பு

நோயின் காரணமாகவோ, மூப்பின் காரணமாகவோ முறையாகப் பல் துலக்காமல் இருப்பதினால் பற்களில் கறை படிந்து, பின்பு நாளடைவில் ஈறு சிதைவாக (Gingivitis) மாறுகிறது. அந்நிலையில் தகுந்த சிகிச்சை மேற்கொள்ளாவிடில் அது ஈறு சுழற்சி (Periodontitis) நோயாக மாறுகிறது.

### பிற நோய்கள்

மூப்பின் காரணமாக வரும் பல நோய்களில் முக்கியமான ஒன்று நீரிழிவு. இது பல் ஈறுகளுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. பெண்களுக்குப் பருவ மாற்றங்களினால் வரும் ஹார்மோன் சமநிலையின்மை ஈறு நோய் தாக்கத்தை அதிகரிக்கிறது.

### பழக்க வழக்கங்கள்

மது அருந்துதல், புகையிலை, புகைப்பிடிப்பதனால் வரும் ஈறு நோய்கள் ஏராளம். இந்தப் பழக்கங்கள் ஈறின் தன்மையை மாற்றுகின்றன.

### மருந்துகள்

நீண்டகாலமாக இதயநோய், மனநோய், நீரிழிவு நோய்க்கான மருந்துகளை உட்கொள்ளும்போது எச்சில் சுரப்பிகள் பழுதடைந்து வாய்வறட்சி உண்டாகிறது. அதனால் பற்குழி, ஈறுநோய் பாதிப்பு அதிகரிக்கிறது.

### மரபியல்


மரபியல் வழியாகவும், அதன் மாற்றங்களாலும் ஈறுநோய் தாக்குதல் அதிகரிக்கிறது.

### ஈறுநோய்க்கான அறிகுறிகள்

- ஈறு வீக்கம், வலி, ஈறில் ரத்தக்கசிவு
- துர்நாற்றம், ஈறு இறுக்கம்
- மிகுந்த பற்கூச்சம்
- பற்களில் திடீர் இடைவெளி ஏற்படுவதால் பற்களில் தளர்வு

### ஈறுநோய் தடுப்பு

- 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் 6-12 மாத இடைவெளியில் தகுந்த பல் ஈறு பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.
- மது, புகைப்பிடித்தல், புகையிலை, பாக்கு முதலிய பல் மற்றும் ஈறு பாதிப்புகளை உண்டாக்கும் பழக்கங்களைக் கைவிட வேண்டும்.
- சேதமடைந்த பற்களைக் கட்டுதல், பற்கறை அகற்றுதல், உணவு அருந்தியவுடன் வாயைக் கொப்பளித்தல், இரண்டு முறை பல் துலக்குதல் வேண்டும்.
- போதுமான தண்ணீர் அருந்த வேண்டும். வயது மூப்பினால் வரும் வறட்சியைக் கட்டுப்படுத்தும் நல்ல ஊட்டச்சத்துள்ள, நார்ச்சத்து மிகுந்த உணவுகளை உண்ண வேண்டும். இது பற்களை மட்டுமின்றி உடல் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கும்.



## சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் பணிநிரந்தரம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு RSP வேண்டுகோள்

**செ**ன்னை மாநகராட்சி மண்டலங்களில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களின் பணி நிரந்தரத்திற்கான உத்தரவாதமின்றி தனியார் கம்பெனியின் கீழ் பணிபுரிய வைப்பதை எதிர்த்து நிரந்தரத்திற்காக கடந்த 13 நாட்களாக போராடி வந்துள்ளதை அறிவோம்.

13.08.2025இல் உயர்நீதிமன்றத்தில் போராடும் தொழிலாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட பொது நல வழக்கின்படி போராடும் இடத்தை விட்டு அப்புறப்படுத்த உத்தரவாகியுள்ளதைத் தொடர்ந்து நள்ளிரவில் காவல்துறை அனைவரையும் கைது செய்துள்ளது. மேலும் இப்போராட்டத்திற்கு ஆதரவாக போராடுகின்ற தொழிற்சங்கத்தினரையும் ஆங்காங்கே மாவட்டங்களில் கைது செய்யும் நடவடிக்கையும் தொடர்கிறது என்ற செய்திகள் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்ததையும் காண முடிந்தது. ஆனால், தூய்மைப் பணியாளர்கள் பணிநிரந்தரம் குறித்த கோரிக்கை ஏற்கப்பட்டதாகவோ, பரிசீலிக்கப்படுமென்கிற எந்த தகவலும் அறிவிப்பில் இல்லை என்பதும் குறிப்பிட வேண்டியதாக உள்ளது.

மேற்கண்ட தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தினை இடதுசாரி அரசியல் கட்சிகள் RSP உட்பட களத்தில் வாழ்த்தி ஆதரவு தெரிவித்துள்ளோம்.

தமிழக அரசு இப்பிரச்சினையை சுமூகமான முறையில் கையாண்டு போராடும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவும், போராடிய தொழிலாளர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும், ஆதரவு தெரிவித்து போராடியவர்களையும் கைது செய்துள்ளதை விடுவித்திடவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நடவடிக்கை மேற்கொண்டிட RSP புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தோழமையுள்ள
**(ஆ. ஜீவானந்தம்)**
மாநில செயலாளர்

# சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் பணிநிரந்தரம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு UTUC வேண்டுகோள்

பெறுநர்: நாள் : 14.08.2025

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள்,
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கட்கு வணக்கம்.

சென்னை மாநகராட்சியில் பணியாற்றி வந்த தூய்மைப் பணியாளர்கள் தங்களை நிரந்தரம் செய்திட வலியுறுத்தியும், தூய்மைப் பணியை தனியார் மயப்படுத்துவதையும் எதிர்த்துக் கடந்த 13 நாட்களாக அமைதியான முறையில் சென்னை மாநகராட்சி அலுவலகம் முன்னர் சாலையோரமாக அமர்ந்து அமைதியான முறையில் LTUC - AICCTU தலைமையில் போராடி வந்துள்ளார்கள்.

கடந்த 05.08.2025இல் தமிழகத்தில் உள்ள அனைத்து மத்திய மற்றும் மாநில தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாய முன்னணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றதில் **''பணிநிரந்தரம், தூய்மைப் பணியை தனியார்மயமாக்கும் நடவடிக்கையை கைவிடக்கோரி போராடும் சென்னை மாநகராட்சி தொழிலாளர்களுக்கு ஆதரவும், ஒருமைப்பாடும் தெரிவிப்பது''** என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதின் தொடர்ச்சியாக, அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் தமிழ் மாநில தலைமை நிர்வாகிகள் UTUC உட்பட போராட்டக் களத்தில் தோழர்களை சந்தித்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளதுடன் தமிழ்நாடு அரசு இப்பிரச்சினையை பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமாக முடித்திட வேண்டுமென்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இடதுசாரி அரசியல் கட்சித் தலைவர்களும், இன்னபிற பொதுநல அமைப்புகளும், பல்வேறு மாநில மாவட்ட தொழிற்சங்கங்களும் போராட்டக் களத்தில் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளார்கள், அரசு தலையிட வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இந்நிலையில் 13.08.2025 நேற்று உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கு ஒன்றின் தீர்ப்பின் அடிப்படையில் போராடுபவர்களை அப்புறப்படுத்திட உத்திரவிட்டதில் அமைதியாக போராடி வந்த தொழிலாளர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் கைது செய்துள்ள செய்திகள் வெளிவந்துள்ளன.

வறுமை கோட்டுக்கு கீழ் வாழ்வாதாரமற்ற நிலையில் வாழும் மக்கள் இப்பணியை நம்பி வாழ்வை அர்ப்பணித்தவர்களான தூய்மை பணியாளர்களை கைது செய்துள்ள நடவடிக்கை ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எனவே, கைது செய்துள்ள தொழிலாளர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் உடனடியாக விடுவித்து, தொழிற்சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி தூய்மைப் பணியாளரின் பணிநிரந்தரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறையின் அமைச்சகத்திற்கும், துறைசார் அலுவலகத்திற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தகுந்த உத்தரவிட்டு தொழிலாளர் நலன் பேண வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# ✉ பெடரேஷன் கடிதங்கள் ☐

பெறுநர்: நாள் : 19.08.2025

**தலைவர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600 002.

ஐயா,

**பொருள் : திரு. G. அண்ணாமலை - பொருத்துனர் நிலை - 2 - மேட்டூர் அனல் மின்நிலையம் - உதவி பொறியாளர் (இயந்திரவியல்) - உள்முகத் தேர்வு - ஒதுக்கீடு - தொடர்பாக.**

**பார்வை : Memo No. 045764/145/G121/2025-1 Dt. 28.07.2025.**

திரு. G. அண்ணாமலை பொருத்துனர் நிலை - 2ல் மேட்டூர் அனல் மின்நிலையத்தில் பணியாற்றி வருகிறார்.

பார்வையில் கண்டுள்ளபடி (Emp ID : 12100186) வரிசை எண். 104 உதவி பொறியாளர் (இயந்திரவியல்) உள்முகத் தேர்வு செய்யப்பட்டுள்ள MTPS காலியிடமிருந்தும் உடன்குடி உற்பத்தி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, தனது வயதான அப்பாவிற்கு இதய சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாலும், அம்மாவிற்கு கண் பார்வை குறைவுள்ளதாலும் மற்றும் தனது மகன்களும் பள்ளியில் படித்து வருவதாலும் பெற்றோரையும், பிள்ளைகளையும் கவனித்து கொள்ள வேண்டியுள்ள குடும்ப சூழ்நிலையின் காரணமாக மேட்டூர் அனல் மின்நிலையத்திற்கு ஒதுக்கீட்டை மாற்றித் தர வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தலைவர் அவர்கள் மேற்கண்ட விண்ணப்பத்தினை பரிசீலித்து திரு. G. அண்ணாமலை பொருத்துனர் நிலை - 2 அவர்கட்கு உடன்குடி உற்பத்தி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாற்றி மேட்டூர் அனல் மின்நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்திடுமாறு உத்தரவிட கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 19.08.2025

**தலைவர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை-2.

ஐயா,

**பொருள் : ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை - தொடர்பாக.**

**பார்வை : 24.07.2025 ஊதிய உயர்வு குழுவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை.**

கடந்த 24.07.2025 அன்று மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கு 01.12.2023 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை நடைபெற்றது.

மேற்கண்ட பேச்சுவார்த்தையில் தொழிற்சங்கங்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வாரியத் தரப்பில் முன்வரைவு எதுவும் அளிக்கப்படவில்லை, பேச்சுவார்த்தையும் தொடரவில்லை என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

பேச்சுவார்த்தை நடைபெறுவது காலதாமதமாகிக் கொண்டே செல்வதால் ஊதிய உயர்வுக்கான இடைக்கால நிவாரணம் அளித்திடவும் (மாதம் ரூ. 5000/-வீதம்) விரைவாக முடிவெடுத்து அளித்திட வேண்டுகிறோம்.

வாரியத் தரப்பு முன் வரைவினை அளித்து இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு தொழிற்சங்கங்களை தனித்தனியாக அழைத்து நேரம் ஒதுக்கி பேச்சுவார்த்தையை தொடர வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 19.08.2025

**தலைவர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை-2.

ஐயா,

**பொருள் : திரு. M. டேவிட் பொன்னையா - சிறப்பு நிலை முகவர் - மதுரை (மாநகர்) மின்வட்டம் - இளநிலை பொறியாளர் 2ம் (மின்னியல்) - (Non Diplamo) - வழங்கிட வேண்டுதல் - தொடர்பாக.**

திரு. M. டேவிட் பொன்னையா சிறப்பு நிலை முகவராக மதுரை (மாநகர்) மின்வட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்.

மதுரை மாநகராட்சியில் பணியாற்றியவர்களை மின்வாரியம் பணிக்கு எடுத்துக் கொண்ட பின்னர் மின்வாரிய பணியாளராக்கி வணிக உதவியாளர் முதல் சிறப்பு நிலை முகவர் வரை பதவி உயர்வு பெற்றுள்ளார்.

Non Diplamo இளநிலை பொறியாளர் பதவி வணிக உதவியாளர் மற்றும் மின்பாதை ஆய்வாளர் பதவி உயர்வு பெற்றதைக் கணக்கில் கொண்டு வழங்கப்படுகிறது. கடந்த 2003ல் வணிக ஆய்வாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். 2003க்கு பிறகு வணிக ஆய்வாளராக பதவி உயர்வு பெற்றவர்களெல்லாம் இளநிலை பொறியாளர் 2ம் நிலையாக (Non Diplamo) பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

குறிப்பாக 06.04.1967ல் பிறந்துள்ள திரு. M. டேவிட் பொன்னையா எட்டாம் வகுப்பு தேர்ச்சிக்கு பின்னர் பணிக்கு வந்துள்ளதால் பின்னர் B.A., Public Administration வரை படித்துள்ளார்.

SSLC படித்திருந்தால் வழங்கப்படும் Non Diplamo இளநிலை பொறியாளர் 2ம் நிலை பதவியை கேட்டு தொடர்ந்து பல வருடங்களாக விண்ணப்பித்து வருகிறார்.

தலைவர் அவர்கள் மேற்கண்ட விண்ணபத்தினை பரிசீலித்து திரு. M. டேவிட் பொன்னையா அவர்களுக்கு இளநிலை பொறியாளர் 2ம் நிலை பதவி உயர்வு வழங்கிட சிறப்பு அனுமதி அளித்து தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்திற்கு தகுந்த உத்தரவிட்டு பதவி உயர்வு வழங்கிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(அ. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 19.08.2025

**தலைவர்,**

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை-2.

ஐயா,

**பொருள் : *காலிப் பணியிடங்கள் - ஒப்பந்த முறையில் பணிக்கமர்த்துதலை ஒழித்து தின ஊதியத்தில் பணியமர்த்திட வேண்டுதல் - தொடர்பாக.***

மின்சார வாரியத்தில் களப்பணி, கணக்கீட்டுப்பணி, நிர்வாகப்பணி, கணக்குப்பணி, தொழிற்நுட்ப பணி என அனைத்து மாவட்டங்களிலும் காலியிடங்கள் ஏராளமாய் உள்ளது. அனைத்து காலியிடங்களிலும் குறிப்பிட்ட அளவு ஒப்பந்ததாரர்கள் வழியாக பணிக்கு தொழிலாளர்களை பணிக்கமர்த்தும் வழக்கம் தொடர்கிறது.

குறிப்பாக,

1. களப்பணி - ஒப்பந்த முறையில்
2. கணக்கீட்டு பணி மற்றும் தொழிற்நுட்ப பணி ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் / பொறியாளர்கள் தினக்கூலி முறையில்
3. நிர்வாகப் பணி - தட்டச்சுப் பணியாளர்கள் ஒப்பந்த முறையில்
4. சுகாதாரப் பணி - ஒப்பந்த முறையில்

என அனைத்து பகுதிகளிலும் ஒப்பந்த முறையில் பணி செய்வதால் மின்சார வாரியத்திற்கு கூடுதல் செலவினம் ஏற்படுவதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

ஒப்பந்ததாரர்கள் மூலம் பணிக்கு அமர்த்துவதால் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் ஊதியத்தைவிட பல மடங்கு கூடுதல் செலவினம் ஆவதால் களப்பணியில், கணக்கீட்டு, தொழிற்நுட்ப, தட்டச்சு, சுகாதாரப் பணிகளில் தொடர்ந்து ஒப்பந்த முறையில் பணி செய்து வருபவர்களை தின ஊதிய அடிப்படையில் தற்காலிகமாக மின்சார வாரியமே நேரடியாக பணிக்கமர்த்திடும் வகையில் கொள்கை முடிவு எடுத்திட தலைவர் அவர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

## தமிழக அரசின் ஓய்வூதிய சீரமைப்பு கூட்டத்திற்கு அழைத்திட வேண்டி TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கடிதம்

பெறுநர்: நாள் : 09.09.2025

**திரு. ஞானதீப் சிங் பேடி,** இ.ஆ.ப
தலைவர் / தமிழக அரசின் கூடுதல் செயலாளர்,
ஓய்வூதியக் குழு, நிதித்துறை, தலைமைச்செயலகம்,
சென்னை - 600 009.

ஐயா,

**பொருள் :** ஓய்வூதியக் குழு - **CPS, OPS and UPS** - மதிப்பீடும் பகுப்பாய்வும் - ஓய்வூதியம் குறித்து சங்கங்களோடு - சந்திப்பு - கருத்து கேட்டல் - தொடர்பாக.

**பார்வை : 1) G.O. Ms. No. 27 Finance (PGC) Department Dt. 04.02.2025**
**2) Govt. Letter No. 900/ Pension Committee / 2025-31. Dt. 08.08.2025.**

பார்வை (2)ல் கண்டுள்ளபடி 01.04.2023க்கு பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு, பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு (CPS) பதிலாக பழைய ஓய்வூதிய திட்டத்தை (OPS) நடைமுறைக்கு கொண்டு வருவது தொடர்பாக பல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் ஓய்வூதியர் சங்கங்களிடம் கருத்து கேட்க அழைக்கப்பட்டுள்ளார்கள்.

TNEB Employees Federation மின்சார வாரியத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்களைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கமாகும். இதுவரை நடைபெற்றுள்ள ஐந்து கூட்டங்களுக்கும் எங்கள் சங்கத்திற்கு அழைப்பு அனுப்பப்படாமல் உள்ளது.

எதிர்வரும் 12.09.2025 இறுதிக்கட்டமாக கூட்டம் நடைபெற உள்ளதாக செய்திகள் அறிகிறோம்.

மின்சார வாரியத்தில் 01.04.2003க்கு பிறகு பணியில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் சுமார் 40,000 அளவில் உள்ளார்கள். மின்சார வாரியத்தில் CPS திட்டத்தில்

பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் 20,000க்கு மேற்பட்டவர்கள் உள்ளார்கள். எங்களது சங்கம் கீழ்க்கண்ட முகவரியில் இயங்கி வருகிறது.

General Secretary
TNEB Employees Federation
39/101, Singanna Street,
Chinthadripet, Chennai - 2
Mobile : 9092268200

தமிழக அரசின் கொள்கை முடிவாக பழைய ஓய்வூதியம் அளித்தல் தொடர்பாக. CPS, OPS&UPS குறித்து சங்கங்களோடு மதிப்பீடும் பகுப்பாய்வும் செய்திட சங்கங்களை அழைத்து பேசிடும் நிகழ்வில் மேற்கண்ட சங்கமாகிய எங்களையும் இந்நேர்காணல் மற்றும் கருத்து கேட்டல் நிகழ்விற்கு கலந்து கொள்ள வாய்ப்பு தந்து அழைத்திடுமாறு மதிப்பிற்குரிய தலைவர் / தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் /ஓய்வூதியக் குழு அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் ஆதரவான பதிலுக்கும் கருத்துக் கேட்டல் கூட்டத்திற்கான அழைப்பிற்கும் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## தமிழக அரசின் ஓய்வூதிய சீரமைப்பு கூட்டத்திற்கு அழைத்திட வேண்டி TNEBREOS கடிதம்

பெறுநர்: நாள் : 09.09.2025

**திரு. ஞானதீப் சிங் பேடி,** இ.ஆ.ப
தலைவர் / தமிழக அரசின் கூடுதல் செயலாளர்,
ஓய்வூதியக் குழு, நிதித்துறை, தலைமைச்செயலகம்,
சென்னை - 600 009.

ஐயா,

**பொருள் : ஓய்வூதியக் குழு - CPS, OPS and UPS - மதிப்பீடும் பகுப்பாய்வும் - ஓய்வூதியம் குறித்து சங்கங்களோடு - சந்திப்பு - கருத்து கேட்டல் - தொடர்பாக.**

**பார்வை : 1) G.O. Ms. No. 27 Finance (PGC) Department Dt. 04.02.2025**
**2) Govt. Letter No. 900/ Pension Committee / 2025-31. Dt. 08.08.2025.**

பார்வை (2)ல் கண்டுள்ளபடி 01.04.2023க்கு பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு, பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு (CPS) பதிலாக பழைய ஓய்வூதிய திட்டத்தை (OPS) நடைமுறைக்கு கொண்டு வருவது தொடர்பாக பல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் ஓய்வூதியர் சங்கங்களிடம் கருத்து கேட்க அழைக்கப்பட்டுள்ளார்கள்.

TNEB Employees Federation and Officers Sangam மின்சார வாரியத்தில் ஓய்வு பெற்றவர்களை 10,000த்திற்கு மேல் உறுப்பினர்களாகக் கொண்ட சங்கமாகும்.

இதுவரை நடைபெற்றுள்ள ஐந்து கூட்டங்களுக்கும் எங்கள் சங்கத்திற்கு அழைப்பு அனுப்பபடாமல் உள்ளது. எதிர்வரும் 12.09.2025 இறுதிக்கட்டமாக கூட்டம் நடைபெற உள்ளதாக செய்திகள் அறிகிறோம்.

மின்சார வாரியத்தில் 01.04.2003க்கு பிற பணியில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் சுமார் 40,000 அளவில் உள்ளார்கள். மின்சார வாரியத்தில் CPS திட்டத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் 20,000க்கு மேற்பட்டவர்கள் உள்ளார்கள்.

எங்களது சங்கம் கீழ்க்கண்ட முகவரியில் இயங்கி வருகிறது.

General Secretary
TNEB Retired Employees
and Officers Sangam,
39/101, Singanna Street,
Chinthadripet, Chennai - 2
Mobile : 8637687223

தமிழக அரசின் கொள்கை முடிவாக பழைய ஓய்வூதியம் அளித்தல் தொடர்பாக. CPS, OPS&UPS குறித்து சங்கங்களோடு மதிப்பீடும் பகுப்பாய்வும் செய்திட சங்கங்களை அழைத்து பேசிடும் நிகழ்வில் மேற்கண்ட சங்கமாகிய எங்களையும் இந்நேர்காணல் மற்றும் கருத்து கேட்டல் நிகழ்விற்கு கலந்து கொள்ள வாய்ப்பு தந்து அழைத்திடுமாறு மதிப்பிற்குரிய தலைவர் / தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் /ஓய்வூதியக் குழு அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் ஆதரவான பதிலுக்கும் கருத்துக் கேட்டல் கூட்டத்திற்கான அழைப்பிற்கும் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(P. சுடலை)**
பொதுச்செயலாளர்

## தமிழ்நாடு அரசு ரேஷன் கடைப் பணியாளர் சங்க கோரிக்கைகள் குறித்து தலைமைச் செயலாளர் அவர்கட்கு UTUC பொதுச்செயலாளர் கடிதம்

பெறுநர்: நாள் : 09.09.2025

**தலைமைச் செயலாளர்** அவர்கள்,
புனித ஜார்ஜ் கோட்டை,
தலைமைச்செயலகம், சென்னை-600 009.

**பொருள் : *தமிழ்நாடு அரசு ரேசன் கடைப் பணியாளர்கள் சங்கம் - கோரிக்கைகள் - 12.09.2025 காத்திருப்பு போராட்டம் - பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டிட வேண்டுதல் - சந்திக்க நேரம் ஒதுக்கிட வேண்டுதல் - தொடர்பாக.***

வணக்கம்.

தமிழ்நாடு அரசு ரேசன் கடைப் பணியாளர் சங்கம் ஊதிய உயர்வு, தனித்துறை உருவக்குதல் போன்ற குறிப்பிட்ட முக்கியமான 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசு நிறைவேற்றித் தர வேண்டி தீர்மானங்கள் இயற்றி அரசினுடைய கவனத்திற்கு அளித்துள்ளார்கள்.

இது தொடர்பான அரசின் நடவடிக்கைகளை எதிர்பார்த்து எதிர்வரும் 12.09.2025ல் தமிழ்நாடு அரசு ரேசன் கடைப் பணியாளர்கள் சங்க தமிழகம் முழுவதும் தங்களது உறுப்பினர்களைத் திரட்டி ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே காத்திருப்பு போராட்டம் நடத்திட உள்ளார்கள். இதற்கான அறிவிப்பு செய்து அனுமதி பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு ரேசன் கடைப் பணியாளர்கள் சங்கம் எங்களது UTUC (United Trade Union Congress) மத்திய தொழிற்சங்கத்தில் இணைப்பு பெற்ற சங்கமாகும். இத்துடன் தமிழ்நாடு அரசு ரேசன் கடைப் பணியாளர் சங்கத்தின் கோரிக்கைகளை இணைத்துள்ளோம். சங்கத்தின் வழியாகவும் தலைமைச் செயலகம் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ளார்கள்.

இப்போராட்டம் குறித்து 08.09.2025 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு கூட்டுறவு சங்கங்கிளன் மாநில பதிவாளர் மற்றும் கூடுதல் பதிவாளர் ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார்கள். பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என தெரிய வருகிறது.

எனவே, இது குறித்து மதிப்பிற்குரிய தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளர் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றிட தகுந்த நடவடிக்கை எடுத்திட வேண்டுவதுடன், 12.09.2025 அன்று தமிழ்நாடு அரசு ரேசன் கடைப் பணியாளர் சங்கத்தின் நிர்வாகிகள் தங்களை சந்தித்து பேசிட தகுந்த நேரம் ஒதுக்கி தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 08.08.2025

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள்,
புனித ஜார்ஜ் கோட்டை,
தலைமைச்செயலகம்,
சென்னை-600 009.

**பொருள் : பொது விநியோத் திட்டம் - சேலம் மாவட்ட தமிழ்நாடு அரசு ரேசன் கடை பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூட்டம் - சங்க தீர்மானங்கள் தெரிவித்தல் - தொடர்பாக.**

மாண்புமிகு தமிழக முதல்வரின் கனிவான பார்வைக்கும், தகுந்த பரிசீலனைக்கும் தக்க நடவடிக்கைகளுக்கும்.

**தீர்மானங்கள்**

1. ரேசன் கடைப் பணியாளர்களுக்கு புதிய ஊதியக்குழு கமிட்டி அமைக்கக் கோரியும், அக்கமிட்டியில் ரேசன் கடைப் பணியாளர் ஒருவரை குழு உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டும் எனவும்,

2. பொது மக்களுக்கு எடைமேடை தராசுடன் விற்பனை முனையக் கருவி புளுடூத்துடன் இணைக்கப்பட்டு சரியான அளவில் பொருள்கள் வழங்குவதுபோல் நுகர்பொருள் வாணிபக் கழக பணியாளர்கள் மூலம் நகர்வு செய்யப்பட்டு, அப்பொருள்களை எடைமேடை தராசில் வைத்து அதனை விற்பனை முனையக் கருவியில புளுடூத் இணைக்கப்பட்டு பொருள்கள் மொத்தமாக விற்பனை முனையக் கருவியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்றும்,

3. 70 வயதிற்கு மேல் உள்ள அட்டைதாரர்களின் வீடுகளுக்கு பொருளய்கள் வழங்குவதை தவிர்த்து, அந்த அட்டைதாரரின் விருப்பத்திற்கு ஏற்ப அவரது நாமினியாக ஒருவரை நியமித்து அவரது ஆதார் இணைக்கப்பட்டு பொருள்கள் வழங்க வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்றும்,

4. தமிழக அரசு புதிய சுகாதார காப்பீடு திட்டம் அரசாணை எண். 22840/NHIS2/2022, தேதி 8.7.2025 என்ற அறிவிப்பினை ரேசன் கடை பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும்,

5. சிறப்பு விநியோகத் திட்ட பொருள்கள் விநியோகிக்கப்படும் நிலையில் அட்டை ஒன்றுக்கு 50 காசு வழங்குவதை தவிர்த்து, அட்டை ஒன்றுக்கு ரூ. 2/- வழங்கப்பட வேண்டும் எனவும்,

6. வருங்கால வைப்புநிதி பிடித்தம் செய்து அத்தொகையினை அப்பணியாளரின் வருங்கால வைப்புநிதி கணக்கில் செலுத்தியும், வருடம் ஒருமுறை அதன் இருப்பு விபரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும்,

7. சொந்த கட்டிட்ம உள்ள ரேசன் கடைகளில் அவசியமாகவும், அத்தியாவசியமாகவும் ரூ. 25,000/- தொகை அளவில் கழிப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுத்திட கூட்டுறவு நிறுவனங்களுக்கு தகுந்த உத்திரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும்,

8. நீண்ட தொலைவு சென்று பணிபுரிந்து வருகிற பணியாளர்கக்கு அருகில் உள்ள இடங்களில் பணிபுரிய அனுமதிக்கவும், ரேசன் கடை பணியாளர்களுக்கும் பொது நிலைத்திறன் அளித்து அதனை அந்தந்த மண்டல இணைப்பதிவாளர் அவர்களின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்பட வேண்டும் எனவும்,

9. 800 குடும்ப அட்டைகள் உள்ள கடைகளை பிரித்தும், 800 குடும்ப அட்டைக்கு ஒரு அளவையாளர் என்ற நிலையில் அனைத்து ரேசன் கடைகளுக்கும் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும்,

10. உணவுப் பொருள் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.இ2/30000/2024, நாள் : 1.8.2025 என்ற சுற்றறிக்கையை கைவிடக் கோரியும், வெளிமாநில, மாவட்ட அட்டைகளுக்கு பொருள்கள் வழங்கப்படுவதால் அவ்வாறான கடைகளுக்கு கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் எனவும்,

11. ரேசன் கடைகள் பிரிக்கப்பட்ட நிலையில் தாய் கடையில் மட்டும் ஒரு விற்பனை முனையக் கருவி உள்ளது. பகுதி நேரக் கடையில் விற்பனை முனையக் கருவி கொடுக்கப்படவில்லை. இதுபோன்ற நிலை தமிழகம் முழுவதும் உள்ளதால் அவ்வாறான அனைத்து கடைகளுக்கும் விற்பனை முனையக் கருவி புதிதாக வழங்கப்பட வேண்டும் எனவும்,

12. அனைத்து ரேசன் கடை பணியாளர்களுக்கும் சங்கத்தின் லாப, நஷ்டம் பார்க்காமல் ஒரே மாதிரியான போனஸ் வழங்கப்பட வேண்டும் என்றும்,

மேற்கண்ட தீர்மானங்களை தெரிவித்துக் கொள்வதோடு தீர்மானங்களை கனிவுடன் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழ்நாடு அரசு ரேசன் கடை பணியாளர் சங்க நிர்வாகிகளை அழைத்து பேச வேண்டும் எனவும் எங்களது தமிழ்நாடு அரசு ரேசன்கடை பணியாளர்கள் சங்க மாநில மையத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி! வணக்கம்

| | |
|---|---|
| **P. தினேஷ்குமார்** | **G. இராஜேந்திரன்** |
| மாநில பொதுச்செயலாளர் | மாநிலத் தலைவர் |

# ''கோடீஸ்வரப் பொதுவுடைமையாளர்''

தொகுப்பு : உடுமலை **ஆர். சக்திவேலு,** மாநில உபதலைவர்,
செல்: 9942741388

இந்தியாவில் ஏன் உலக அளவில் தொழில்துறை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வரும் குடும்பம் என்றால் ''டாடா குடும்பமே'' இரும்பு, எஃகு தொழில் துவங்கி மோட்டார் வாகனம், தொலைத்தொடர்பு 6T601 அனைத்து துறைகளிலும் கால் பதித்து, இன்றைக்கு இந்தியாவின் கோடீஸ்வரர்கள் குடும்பங்களில் முதல் பணக்காரராக விளங்குபவர் டாடா என்பதும் நாம் அறிந்ததே அப்படிப்பட்ட இந்திய கோடீஸ்வர குடும்பத்தில் ஒரு ''கம்யூனிஸ்ட் தோழராக'' உருவெடுத்த ஒருவரை பற்றி தான் இப்பதிவில் பதிவிட விரும்புகிறேன் பம்பாய் மாநகரில் 28.03.1874இல் பார்ஸ் குடும்பத்தைச் சார்ந்த கோடீஸ்வர வணிகரான டோராப்ஜி சக்லத்வாலா என்பவருக்கும் இந்தியாவில் முதல் முதலில் இரும்பு உருக்கு ஆலையை நிறுவிய டாடா எனும் கோடீஸ்வரரின் தங்கைக்கும் மகனாக பிறந்தவர் தான் ''ஷாபுர்ஜி சக்லத்வாலா டாடா'' இளமையிலேயே சிறந்த படிப்பாளி அறிவாற்றல் மிக்க செல்வந்தர் இருந்தாலும் பள்ளியில் ஏழை எளிய மாணவர்களுடனேயே நட்பு பாராட்டி, அவர்களுக்கு பாடமும் சொல்லித் தந்து தேவையான உதவிகளை செய்ய ஆரம்பித்ததே இவரை பிற்காலத்தில் ஒரு பொதுவுடமையாளராக மாற்றிட காரணம் எனலாம்.

பள்ளி படிப்பும், கல்லூரி படிப்பும் முடிந்து குடும்பத் தொழிலை விருத்தி செய்ய விரும்பி பீகார், ஒரிசா, காடுகளில் அலைந்து திரிந்து இரும்பு கனிமங்கள் இருக்கும் இடங்களை கண்டறிந்து டாடா இரும்பு உருக்காலை நிறுவவும், வளரவும், பெரும் பங்காற்றினார் அதோடு டாடா உருக்காலையை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

இவரது நிர்வாகத்தில் உழைக்கும் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு அளித்தார் தொழிலாளர்களுடன் முதலாளி என்ற பேதம் இல்லாமல் மிக நெருக்கமாக பழகினார் கடைநிலை ஊழியர்களுக்கும் கௌரவமான நிலையில் ஊதிய வேறுபாட்டை சரி செய்தார் இதனால் தொழிலாளர்கள் மனம் மகிழ்ந்து



உற்பத்தி அதிகரித்து லாபம் அதிகரித்தது. இந்நிலையில் 1896 முதல் 1902 வரை பம்பாயில் பரவிய கொடும் பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் இறந்த நிலையில் கூட பம்பாய் அரசு எதையும் கண்டுகொள்ளாத நிலையில் கண்டித்ததுடன், இவரே சேரி, சேரியாக சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க மருத்துவ உதவி, நிதி உதவி, உணவு உதவி, ஏற்பாடு போன்ற சமுதாய பணிகளில் ஈடுபட்ட காரணத்தினால் இவரது புகழ் மக்கள் மத்தியில் மேலும் அதிகரித்தது. டாடா ஊருக்கு ஆலை நிர்வாகத்தைக் கவனிக்காமல் மக்களைச் சந்திப்பதிலேயே தனது கொள்கையாகக் கொண்டதை அறிந்த இவரது தந்தை இங்கிருந்தால் சரி ஆகாது எனக்கருதி லண்டனில் இருந்த அவரது கிளைக்கு மேலாளராக நியமித்து அனுப்பி வைத்தார்.

இடம் மாறினாலும் உள்ளக் கனவு மாறாத ஷாபுர்ஜி சக்லத்வாலா அங்கு மக்களுக்கு சேவை

செய்ய வேண்டுமென கருதி சமத்துவமும் சகோதரத்துவமும் எனும் கொள்கை கொண்ட ''லிபரல்'' கட்சியில் சேர்ந்து சிறிது நாட்களிலேயே அதன் நடவடிக்கை பிடிக்காமல் லண்டன் தொழிலாளர்கள் கட்சியில் இணைந்தார். தொழிலாளர் கட்சியில் இணைந்ததை பாராட்டி மகாகவி பாரதியார் 10.11.1906இல் பாராட்டி கடிதம் எழுதினார். 1908இல் திருவிகவும் பாராட்டி கடிதம் எழுதியுள்ளார். அக்கட்சியில் சிறப்பாக செயல்பட்டு மக்களையும் மாணவர்களையும் கூட அவ்வப்போது சந்தித்து தனது அறிவாற்றல் நினைவாற்றல், நாவன்மை, பேச்சாற்றல் காரணமாக மக்களின் பேராதரவை பெற்று 1922 நவம்பரில் ''பாட்டர்ஸீ'' தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். 1923ல் அதே தொகுதியில் 186 வாக்குகள் குறைவாக பெற்று தோல்வியடைந்தார்.

தொழிலாளர் கட்சி பொதுவுடமை கொள்கைக்கு முரண்பாடாக உள்ளதை தெரிந்தவர் அக்கட்சியை விட்டு விலகி லெனினால் தோற்றுவிக்கப்பட்ட பிரிட்டிஷ் பொதுவுடமை இயக்கத்தில் இணைந்து அக்கட்சி சார்பாக முன்பு போட்டியிட்டு தோல்வி அடைந்த அதே ''பாட்டர்ஸீ'' தொகுதியில் 400 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார் நாட்டு மக்கள் இடையேயும் பாராளு மன்றத்திலும் சிறந்த பேச்சாளர் என பெயர் எடுத்தார். எந்த ஒரு கருத்தையும் துணிச்சலுடன் தெளிவுடன் அச்சமின்றி பேசுவதில் வல்லவராக திகழ்ந்தார். ''சோவியத்'' அரசை பிரிட்டிஷ் அரசு அடிக்கடி மிரட்டிய போது ''சோவியத்தை மிரட்டாதே'' என்ற முழக்கத்துடன் தொழிலாளர் களை ஒன்று திரட்டி கண்டனம் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் ஒரு நிமிடம் கூட நீடிக்க கூடாது என பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலேயே முழங்கியவர். இந்தியாவை இந்திய அரசர்கள் ஒருபோதும் ஆண்டதில்லை என பிரிட்டிஷ் அமைச்சர் பேசியதற்கு ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு முன்பு பிரிட்டிசை எந்த ஆங்கிலேயரும் ஆண்டதில்லை என பதிலடி கொடுத்தவர் இந்தியாவில் செல்வம் ஏதும் இல்லை என்று ஒரு முறை ஆங்கிலேய அமைச்சர் பேசியதற்கு லண்டனில் பிஸ்கோத்தும், செருப்பும், பூட்ஸ் போன்ற காலணியும் தானே செய்கிறீர்கள் என மிகத் துணிவுடன் நெஞ்சுரத்துடன் பேசியவர் 1927 இல் சென்னை மெரினா கடற்கரை எதிரில் ராணி மேரி கல்லூரி பக்கம் இருந்த நடுக்குப்பம் என்ற மீனவர் குடும்பத்தை காலி செய்ய பிரிட்டிஷ் அரசு நிர்பந்தித்ததை தோழர் சிங்காரவேலு அவர்களுடன் தொடர்பு கொண்டு, அவரது எதிர்ப்பை லண்டன் பாராளுமன்றத்தில் கண்டித்து பேசி குப்பத்தை காலி செய்ய விடாமல் தடுத்து நிறுத்தியவரும் இவரே.

1931இல் தந்தை பெரியார் சோவியத்துக்கு சென்ற போது அதற்கான ஏற்பாடுகளை செய்து உதவி செய்தவர் பயணம் முடிந்து பெரியார் இந்தியா திரும்பும்போது லண்டன் சென்று ஷாபுர்ஜி சக்லத்வாலாவை சந்தித்து நன்றி கூறி பேசி வந்தார். ஆங்கில மொழியில் சரளமாக உரையாடுவதில் வல்லவரான இவர் 1935 ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே பேசி, அவர்களது பாராட்டுகளை பெற்றதோடு, மாணவர்களையும் பொதுவுடமை இயக்கத்தில் இணைத்தார் ஆங்கில மொழியில் பேசும்போது அவர் சொல்லைத் தேடிச் சென்றதில்லை சொற்கள் மட்டுமே அவரைத் தேடி வரும். 14.01.1927ல் இந்தியா வந்த இவரை வரவேற்று உபசரித்து பம்பாயில் விருந்து வைத்து சிறப்பித்தார் சரோஜினி நாயுடு அவர்கள் டெல்லி, அலகாபாத், போன்ற இடங்களில் தொழிலாளர்களை, தொழிற்சங்க தலைவர்களை ஒன்று திரட்டி உரையாற்றினார் பின்னர் மீண்டும்

தோழர் சிங்காரவேலு அவர்களது அழைப்பின் பேரில் 25.2.1907 சென்னை வந்தவர் மெட்ராஸ் லேபர் யூனியன், எம்.எஸ்.எம் தொழிலாளர் பேரவை, சூளை மில் தொழிலாளர் சங்கம், டிராம்வே சங்கம் மற்றும் அச்சு தொழிலாளர்கள் சங்கம் ஆகிய தொழிலாளர்களிடையே சுதந்திர வேட்கையை தூண்டி, பொதுவுடமை கருத்துக்களை விதைத்தவராவார் எனலாம் மூன்றாம் முறையாக சோவியத் யூனியனில் பிரச்சாரம் செய்த போது ஏற்பட்ட இதய வலி காரணமாக இங்கிலாந்து திரும்பி சிகிச்சை பெற்று அதன் பின்னரும், தொழிலாளர்கள், தொழிற்சங்கம், பொதுவுடமை பணிகள் என தீவிரமாக செயல்பட்ட ''கோடீஸ்வரத் தோழர் ஷாபுர்ஜி சக்லத்வாலா டாடா'' தமது 61 வயதில் 16.01.1936ல் மறைந்தார்.

இந்தியாவில் உதித்த கோடீஸ்வரச் ''சிவப்பு சூரியன்'' இங்கிலாந்து மண்ணில் பிரகாசமிட்டு, புகழ்பெற்று, மறைந்த செய்தி கேட்டு தொழிலாளர்கள் அனைவரும் தங்களது குடும்பத்தில் ஏற்பட்ட பேரிழப்பாக கருதி கதறி அழுதார்கள் அவரது மறைவு குறித்து பொதுவுடமை கட்சியின் செயலாளர் ''ஹாரிபட்'' பேசும் போது ''சக்லத் வாலாவைப் போல தொண்டாற்ற யாராலும் முடியாது, எங்களுக்கு ''மிக மிக கடினம்'' என்றார்.

தன் வாழ்நாள் முழுதும் துணிவான தீவிரமான போராட்ட வீரர் எனவும், உண்மையான இந்திய சுதந்திரத்திற்காக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலேயே குரல் கொடுத்தவர் என புகழாரம் சூட்டினார் ஜவஹர்லால் நேரு.

''மாபெரும் சமதர்மி'' இவரது சமதர்மம், கலப்பற்ற சமதர்மம் நேரத்துக்கு தக்கபடி பேசக்கூடியவர் அல்ல தமது வாழ்க்கையிலும் சமதர்மத்தை கொண்டு வாழ்நாள் முழுவதும் ஜனநாயக சோசலிச சமுதாய புரட்சியாளராகவே திகழ்ந்தவர்'' என தோழர் சிங்காரவேலர் தெரிவித்தார்.

பொதுவுடமை எனும் கம்யூனிச தத்துவத்தை கண்டு ஒரு சிலர் அஞ்சினாலும் இந்தியாவில் அதுவும் தமிழகத்தில் ஆண்ட ஆட்சியாளர்கள் அனைவருமே அவரவர் சார்ந்த அமைப்புகள் கட்சிகளின் பெயர்கள் வெவ்வேறாக இருந்தாலும் அவர்களது உள்ளங்களில் பொதுவுடமை கொள்கைகளே நிறைந்து இருந்தது எனலாம்.

ஒரு முறை தந்தை பெரியார் இடம் கம்யூனிசம் என்றால் என்ன என்று கேட்டபோது அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதே எனது கொள்கை இளம் விதவைகளை மொட்டை அடித்து, மூலையில் உட்கார வைப்பதற்கு மாறாக மறுமணம் செய்வதில் தவறில்லை என்கிறேன். வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்களை கல்வி கற்க அனுப்புங்கள் என்கிறேன் அப்படிப் பார்த்தால் நானும் கம்யூனிஸ்ட்தான் என்றார்.

இதே கேள்வியை பத்திரிகையாளர்கள் ஒரு முறை அறிஞர் அண்ணாவிடம் கேட்டபோது வறுமையில் வாடும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக விவசாயி களுக்காக விவசாய தொழிலாளர்களுக்காக யார் ஒருவர் அவர்களது உரிமைக்கு போராட முன் வருகிறார்களோ அவர்கள் எல்லாருமே கம்யூனிஸ்டுகள் தான் என்றதோடு ''ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்'' என்ற கருத்துடைய நானும் தெரிந்தோ தெரியாமலோ ஒரு கம்யூனிஸ்ட் தான் என்றாராம்.

இந்த கருத்தை டாக்டர் கலைஞர் இடத்தில் கேட்ட போது கல்வியில் ஆகட்டும் வேலைவாய்ப்பில் ஆகட்டும் ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டவர் களுக்காக 69 சதவீதம் பெற போராடி நான் பெற்ற

வெற்றியை சமூக நீதிக்கான வெற்றி என்னும்போது நானும் ஒரு கம்யூனிஸ்ட் தான் என்றாராம்.

குறள்படைத்த வள்ளுவருக்கு நிறமும் இல்லை, மதமும் இல்லை என்ற பாரதிதாசன் பாடிய வள்ளுவரும், வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரும், கல்வி கண் திறந்த மதிய உணவு படைத்து ஏழை மாணவர்களுக்கு உதவிய கர்மவீரர் காமராஜரும், தனி ஒருவருக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற மகாகவி பாரதியும், ஏழை எளிய மக்களுக்காக பாரதி வழியில் ஒரு ரூபாய்க்கு இட்லி தந்து பசிபோக்கும் வெள்ளை உடை தரித்து வெள்ளை உள்ளத்தோடு வெண்மை நிற இட்லி தரும் கோவை கமலம்மாள் பாட்டியும் 30 கோடியார் பாரதத்தார் இவர் முற்றும் ஒரே சமூகம் என்ற பாரதிதாசனும் கூட எனது பார்வையில் ‘‘கம்யூனிஸ்ட்களே’’,

ஒரு மேல் நாட்டு கருத்தியலாளர் பேசும்போது இவ்வுலகில் இறுதியில் மீதமாக நிற்பது புரட்சி கலந்த சோசலிசமும் கம்யூனிஸமும் மட்டுமே என்று கூறியது நிதர்சனமான உண்மை.

☆☆☆

